# உலகத் தமிழர் குரல்
# ULAKA THAMILAR KUTAL


ஒலி 20 ★ மார்கழி - 2001 ★ குரல் 17

திருவள்ளுவர் ஆண்டு 2032 சிலை - திங்கள்

கலி வருடம் 5103 சஞ்சிகை 5


அரசியல் கலப்பற்றது - NON POLITICAL

## இந்த இதழில்

தென்னாபிரிக்காவில் 8வது தமிழ்ப் பண்பாட்டு உலக மகாநாடு

பொதுச் செயலாளரின் இலங்கைப் பயணம்

உலகத் தமிழர் பொருளாதாரம்

★ திரு. சி. செல்லையா அவர்கள்

ஆய்வுக் கட்டுரைகள்

தென்னாடுடைய சிவனே என்னாட்டவர்க்கும் இறைவன்

★ திரு. செ. மதுசூதனன் அவர்கள்

பிறநாடுகளில் தமிழும் பண்பாடும்

★ அறிஞர் கதிர் தணிகாசலம் அவர்கள்

தண்டமிழ் வேலி

மற்றும் பல சிறப்பம்சங்கள் இடம் பெற்றுள்ளன.

அன்பளிப்பு: ரூபா 20/-


வெளியீடு உ. த. ப இயக்க இலங்கைக் கிளை யாழ்ப்பாணம்

—— எண்ணம் ——

# தேசங்கள் தோறும் தமிழ்ப் பணி செய்வோம்

உலகில் பல நாடுகளில் தமிழர்கள் வாழ்ந்து வருகின்றார்கள். இவர்கள் வாழும் நாடுகளில் தமிழ்மொழி அறிவைப் பெற வாய்ப்பில்லை இந்த நிலை தோன்றக் காரணங்கள் பல உள்ளன.

இவர்கள் வாழும் தேசங்கள் பலவற்றில் வேற்று இனங்களின் அரசியல், மொழி ஆதிக்கம் இருந்து வருகின்றது. சொந்தமான அதிகாரம் பெற்ற நாடுகள் எதுவும் தமிழர்களுக்கு இல்லை. தமிழ் இனத்தின் பாரம்பரிய ஆட்சியுரிமைகள் அழிக்கப்பட்டுவிட்டன. இதனால் இந்த நாடுகளில் தமிழர்கள் தாய் மொழியைக் கற்கவாய்ப்பில்லை. இதால் இவர்கள் வாழ்ந்து வரும் நாட்டு மொழியைக் கற்று அதைப் பின்பற்ற வேண்டியுள்ளது. இது காலந்தோறும் தாய் மொழி இழப்பை ஏற்படுத்தி வருகின்றது. ஆயினும், இனத்தின் பண்பாடு, பழக்க வழக்கங்கள் பல மாற்றமடையாமல் இருப்பதைக் கானலாம்.

இலங்கை, இந்தியா, சிங்கப்பூர், மலேசியா மற்றும் இலங்கைத் தமிழர் புலம் பெயர்ந்து குடியேறி வாழும் கனடா, இங்கிலாந்து, பிரான்ஸ், ஜேர்மனி, சுவிஸ் போன்ற தேசங்களில் தமிழ் மொழி வாசனை வீசி விளங்கி வருகின்றது. இலங்கை, இந்தியா, சிங்ப்பூர், மலேசியா ஆகிய நாடுகளில் தமிழ்க் கல்வி அறிவை பெறுகின்ற வாய்ப்புகளும், வசதிகளும் அதிகம் உள்ளன. 15 லட்சம் தமிழர்கள் உள்ள தென்னாபிரிக்காவில் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பட்டம் எடுக்க வசதி இருந்தாலும் அதைப் பயன்படுத்துவோர் மிகச் சிலரேயாவர் மிகச் சிலரேயாவர் இன்றைய இளைய தலைமுறையினர் அநேகர் ஆங்கில மொழிக்கு அடிமையாகி விட்டனர்.

இலங்கையில் தமிழர்களின் பாரம்பரிய வாழ்விடங்களான வடக்குக் கிழக்கு மாநிலங்களிலும், மற்றும் மத்திய மலையகப் பகுதிகளிலும் 30 லட்சம் தமிழர்கள் உள்ளனர். இவர்களில் 90 விழுக்காட்டினர் தமிழ்க் கல்வி அறிவுடையவர்களாவர். இலங்கைத் தமிழர்கள் மற்றும் தமிழ் பேசும் இஸ்லாமியர்களும் (10 லட்சத்துக்கு மேல்) பாலர் முன்பள்ளி முதல் பல்கலைக் கழகம் வரை தமிழில் படித்து அறிவைப் பெற வசதிகள் இருக்கின்றன.

தமிழ்நாட்டில் இந்த நிலைமை எதிர்மாறாக உள்ளது. எட்டுக் கோடி தமிழர்கள் வாழ்கின்ற தமிழகத்தில் சில் லட்சம் பேர் மட்டும் தமிழ்க் கல்வி பெறுகின்றார்கள். அங்கே ஆரம்பக் கல்விப் பாட மொழியாக, தாய் மொழி தமிழ் கட்டாயமாகக்கப்படவில்லை. இதனால் பெருந்தொகை தமிழ மாணவர்கள் ஆங்கில் மொழியில் படிப்பைத் தொடர்கின்றனர். இந்நிலையில் கோடிக் கணக்கான தமிழர்கள் தமிழ் சரியாகப் பேச எழுத வாசிக்க முடியாதவர்களாக இருப்பதைக் காணலாம். ஆயினும் கேரளா, கர்நாடகா, ஆந்திரா போன்ற அயல் மானிகளில், அந்தந்த மானில மொழிகளே மாணவர்களுக்கு கட்டாய பாட மொழியாக்கப்பட்டுள்ளன. இதனால் அவர்கள் பேசிவரும் திராவிடக் குடும்ப மொழிகள் அபிமானத்துடன் வளர்ந்து வருகின்றன.

தமிழ் நாட்டில் சிறார்களுக்கு ஆரம்பக்கல்வி தமிழில் அளிக்கப்படவேண்டிய முக்கியத்தவத்தை தமிழ் அறிஞர் பெருமக்கள் உணர்ந்து செயல்பட வேண்டும் அல்லாதவிடத்து தமிழகத்தில் தமிழ்க்கல்வி அறிவு வருங்காலத்தில் வீழ்ச்சியைச் சந்திக்கும் நிலைமை உருவாகும். 60 ஆண்டுகள் வரலாறும் 40 ஆண்டுகள் அரசியல் ஆதிக்கமும் கொண்டமைந்து விளங்கி வரும் திராவிட இயக்கங்கள் தமிழக் கல்விச் சிரழிவுக்குப் பொறுப்பேற்க வேண்டும். இவை மாறி மாறி ஆட்சி அதிகாரங்களில் தொடர்ந்து இருந்து வருகின்ற போதிலும் தமிழ் மாணவர்களுக்கு தமிழ் மொழிக் கல்வியை கட்டாயமாக்குவதில் தவறிவிட்டன. இது பெரியதொரு



குறைபாடாகும். அங்கே உள்ள தமிழ் அறிவாளிகள், அறிஞர்கள், தமிழை எழுதி வருமானம் பெற்று தமிழால் வாழும் மக்கள், தமிழால் வர்த்தகம் புரியும் பெருமக்கள் போன்றோர் தமிழ்க் கல்வி அனைவருக்கும் அவசியம் பற்றி பிரசாரம் செய்யாமலிருப்பது விசனத்துக்குரியது. தமிழ் வளர்ச்சியும், தமிழ் பரப்பும் எழுச்சியும் அங்கே இன்னும் தோன்றவில்லை. இந்த விடயம் கண்டிப்பாக செயல் ஊக்க வேகம் கொள்வதால் நன்மை விளையும்.

இலங்கையில் வடக்கு கிழக்குத் தமிழ் ஈழப்பகுதிகள், மற்றும் மலைநாடு உட்பட தென்னிலங்கைப் பகுதிகள் அடங்கலாக 2000க்கு மேல் தமிழ்ப் பள்ளிக் கூடங்கள் நடக்கின்றன. இவற்றில் உயர் கல்லூரிகள் அடங்கும். தேசிய பல்கலைக் கழகங்கள் சிலவற்றில் கலைப் பாடங்கள், விஞ்ஞானப் பாடங்கள்: தமிழ் மூலம் படித்து பட்டம் பெற வாய்ப்புக்கள் உள்ளன. இதனால் தமிழ்க்கல்வி சிறப்பாக இலங்கையில் வளர்கின்றது. ஆயினும் தமிழ் அறிவாளிகள். அறிஞர்கள் பலர் தமிழை வளர்க்கும் முயற்சிகளில் ஈடுபடுவது மிகக் குறைவு. இங்கே 20 ஆண்டுகளாக நடைபெற்று முடிவுறாமல் இருக்கும் தமிழர் உரிமை மீட்கும் போர்ப்பிரச்சினைகளால், தமிழ் வளர்ச்சிக் கழகங்கள், சங்கங்கள், நிறுவனங்கள் பல செயல படாமல் இருந்து வருகின்றன. இதனால் நன்மை வராது. ஆகையால் தமிழ் வளர்ச்சி பெற மக்களும், அறிஞர்களும், ஊக்கம் பெறுவதும், தமிழ் பணிசெய்வோருக்கு ஊக்கமளிப்பதும் இனத்தின் முன்னேற்றத்துக்கு செய்யும் தார்மீகக் கைமாறாகும்.

இக்காலத்தில் போர்ப் பிரச்சினைகளால் சில லட்சம் ஈழத்தமிழர்கள் அகதிகளாக மேலை நாடுகளில் வாழ்கின்றனர். இவர்களின் பிள்ளைகள் தாய் மொழிக் கல்விபெற முடியாத நிலை உள்ளது. இவர்கள் ஆங்கிலம், பிரெஞ்சு, ஜேர்மன் மற்றும் டொச் மொழிகளை ஆரம்பக் கல்வியாகக் கற்று வருகின்றார்கள். இதனால் இவர்கள் தமிழை அறிய முடியாதவர்களாகி வருகிறார்கள்.

கனடா நாட்டில் உள்ள பல தமிழ் அமைப்புகளின் ஒன்றியம் தமிழ்ச் சிறார்களுக்கு தொண்டுப் பணியாக வாரத்தில் இருநாட்கள் தமிழ்மொழியைப் படிப்பித்து வருகின்றது. இந்தப் பணி பாராட்டப்பட வேண்டிய முயற்சியாகும். கனடாவில் வாழும் அனைத்துத் தமிழ்ச் சமூகமும் இந்தக் கல்விப் பணியை மதித்துப் பயன்படுத்த முன் வருவது சாலச் சிறப்பாகும். இதே போன்ற செயற்பாடுகள் ஐரோப்பிய நாடுகளில் சிறிய அளவில் நடந்து வருகின்றன. இந்தச் சமூகப் பணி விரிவாக்கம் பெறுதல் நன்மை பயக்கும் அங்கே வாழும் அன்பர்கள் இப்படியான பணியைத் தொடங்கி இயக்க வேண்டும். பல நூறு தமிழ்க் குடும்பங்கள் வாழும் பகுதிகள் தோறும் தமிழ்க் கல்வி அறிவூட்டும் பணி தவறாமல் செய்ய ஆர்வமுள்ளோர் முன்வரவேண்டும்.

மேலை நாடுகளில் வாழும் தமிழ் மாந்தர்கள் தமிழர்களுக்கு தமிழ்க் கல்வி அறிவை வளர்க்கும் கடமையைத் தொண்டுப் பணியாகவோ அல்லது வருமான நோக்கிலோ செய்ய முன் வருவது வளர்ச்சிக் கு உதவி நிற்கும். எனவே தாய் மொழியை மறந்தால் இன அடையாளம் அழிந்துவிடும். ஆன காரணங்களால் நமது மக்கள் வாழும் தேயங்கள் தோறும். தமிழைப் படித்தல் தமிழைப் பேசி வருதல், தமிழை மற்றையோருக்கு கற்பித்தல், தமிழ் வளர தமிழ்ப் பண்பாட்டு கலாச்சாரப் பணிகள் மேற்கொண்டு வருதல் போன்றவை தமிழ் மொழி இன முன்னேற்றத்துக்கும் உயர்வுக்கும் இட்டுச் செல்லும் என்பது மனங்கொள்ள வேண்டிய உண்மையாகும்.

அன்புடன்

**ஆ. சண்முகலிங்கம்**

ஆசிரியர், தலைவர் உ.த.ப. இன் இலங்கைக்கிளை


**உ.த.ப இயக்கம் இலங்கைக் கிளை**

**Address:**

"Paramanathan House"
Manipay Road,
Thavady.
Kokuvil. Sri Lanka. T.P 3294

021-






# பொருளாதார சக்தியாக உலகத் தமிழர்கள் உருவாக வேண்டும்

**8வது உ. த. ப. இயக்க மகாநாட்டில் தலைவர் திரு. சி. செல்லையா அறைகூவல்.**

**தென்னாபிரிக்கா டர்பனில் இடம்பெற்ற 8வது உலகத் தமிழ்ப் பண்பாட்டு மகாநாட்டில் தமிழர்கள் பொருளாதாரத்தில் ஓர் உலக சக்தியாக யூதர்களைப் போன்று ஒன்றிணைய வேண்டுமெனும் அறை கூவலைத் தலைவர் சி. செல்லையா விடுத்துள்ளார்.**

**உத்தேச சர்வதேசத் தமிழர் கொடியும் கீதமும் தயாராகவுள்ளதாகவும் இவற்றை ஒற்றுமைக்கான கருவிகளாகப் பயன்படுத்த வேண்டுமென்றும் உ. த. ப. இயக்கத்தலைவர் சின்னத்தம்பி செல்லையா குறிப்பிட்டார்.**

**கனடா, ஜேர்மனி, நோர்வே, மலேசியா, டென்மார்க் மற்றும் தென்னாபிரிக்காவைச் சேர்ந்த 500 பேராளிகள் இந்த மகாநாட்டில் கலந்துகொண்டனர்.**

**திரு. சி. செல்லையா அவர்கள் மேலும் தெரிவித்ததாவது.**

**நாங்கள் எம்மை இந்தியத் தமிழரென்றோ, தென்னாபிரிக்காத் தமிழரென்றோ, மலேசியா தமிழரென்றோ ஒரு குறிப்பிட்ட நாட்டின் அல்லது, பிராந்தியத்தின் தமிழர் என்றோ அழைத்துக் கொள்ளக் கூடாது நாம் உலகத் தமிழரென்று பெருமையுடன் கூறிக் கொள்ளுதல் வேண்டும். நமது சமூகம் தமிழ்ச் சமூகமென்று சொல்லுதல் வேண்டும். நாம் இந்தக் கொடியுடனும் கீதத்துடனும் முன்னேறி உலகம் புகழும் ஒரு பலமான சமூகத்தைக் கட்டியெழுப்புதல் வேண்டும்**

உலகத் தமிழ்ப்பாண்பாட்டு இயக்கம் பக்கம் சாராத ஒன்று என்பதோடு அது தமிழ்க் கலாச்சாரத்தையும் மொழி அபிவிருத்தியையும் பாதிக்காத வகையில் எந்த அரசியில் கட்சியினதும் செயற்பாடுகளுக்கு விரோதமானதன்று.

நாம் தமிழர் உலக அபிவிருத்தி வங்கி ஒன்றையும் ஏற்படுத்துதல் வேண்டும். இது தமிழர்களின் வழித் தோன்றல்களுக்கு அவசியமானதாகும். ஒரு காலத்தில் காலின் கீழ் மிதிப்பட்ட யூதர் ஜனசமூகம் இன்று தலை நிமிர்ந்துள்ளது. இவர்களின் பொருளாதார பலம் காரணமாக அமெரிக்காவே இவர்களுக்கு அஞ்சுகின்றது.

தமிழர்கள் ஒவ்வொரு நாட்டிலும் சுபீட்ச மடைவதன் மூலம் தமிழ்ச் சமூகத்தை அபிவிருத்தி செய்து முன்னேற்றக் கூடிய எந்தத் தமிழருக்கும் உதவி செய்ய முடியும்.

எமது கொடி மரபுரிமைக் கொடியாகும். அது தமிழ் மன்னர்களின் சின்னங்களாகிய அம்பும், வில்லும், புலி, மீன் மற்றும் யாழ் என்பவற்றையும் இந்து நாகரிகச் சின்னமாகிய காளை மாட்டையும் கொண்டுள்ளது. நம் முன்னோர்களாகிய விவசாயப் பெருமக்கள் விளங்கிய உதய சூரியனும் அதில் இடம் பிடித்துள்ளது. தேசிய கீதம் கனடாவிலுள்ள தமிழ்ப்புலவர் உதயகரன் துரைராஜாவினால் இயற்றப்பட்டுள்ளது. அது தமிழர் நாகரிகத்தின் கடந்த காலப் பெருமைகள் மற்றும் எதிர்கால அபிலாஷைகளை எடுத்துரைப்பதாக அமைந்துள்ளது. இந்த முயற்சிக்காக கனடிய அரசு இவரைக் கௌரவித்துள்ளது

நன்றி - (இன்டோ ஏசியன் நியூஸ் சேவீஸ்) வீரகேசரி -(23.12.2001)

**சைவசமயப் பரீட்சை மற்றும் சைவப் புலவர் பரீட்சைகள்**
**ஐரோப்பாவில் உ.த.ப. இயக்கம் நடாத்தும்**

ஐரோப்பிய நாடுகளில் வாழ்ந்து வரும் இந்துமாணவர்களின் நன்மை கருதி உ.த.ப இயக்க ஐரோப்பிய ஒன்றியம் இந்த ஆண்டில் சைவசமயப் பரீட்சை மற்றும் சைவப்புலவர் பரீட்சை இரண்டையும் ஐரோப்பாவில் நடாத்தவுள்ளது. இப்பரீட்சைகளுக்கான வினாத் தாள்களை உ.த.ப. இயக்கத்தின் இலங்கைக் கிளையின் கல்விப் பகுதி தயாரித்து அனுப்பவுள்ளது. மேற்படி பரீட்சைகளில் தோற்றிச் சித்தி பெறும் மாணவர்களுக்கு உதய இயக்க இலங்கை கிளை சான்றிதழ்களை வழங்கவுள்ளது.



# பொதுச் செயலாளரின் இலங்கைப் பயணம்
## இலங்கை கிளைப் பிரமுகர்களுடன் சந்திப்பு

இந்த ஆண்டில் ஆகஸ்ட் மாதத்தில் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் உலகத் தமிழ்க் கல்வி மகாநாடு சென்னையில் நடைபெற்றது. இந்த மகாநாட்டில் கலந்து சிறப்பிக்கப் பல நாடுகளிலிருந்து அறிஞர்கள் சென்னைக்கு வந்து மீண்டனர். இந்த மகாநாட்டுக்கு உ. த. ப. இயகத்தின் பொதுச் செயலாளர் திரு துரை கணேஷலிங்கம் அவர்களும் வருகை புரிந்தார் தமிழ்ப் பணிச் செம்மல் திரு. துரை கணேஷலிங்கம் அவர்கள் உ. த. ப. இயக்கத்தின் ஐரோப்பிய ஒன்றியத்தின் பொறுப்பாளருமானவார். இவர் உ. த. ப. இயக்கம் நடாத்திவரும் தமிழ்மணி, குறள்மணி பட்டப்படிப்புக் கல்விக்கும் பொறுப்பாக இருந்து வருகின்றார்.

சென்னையில் உலகத் தமிழ்க் கல்வி மகாநாட்டில் பங்குபற்றி விட்டு, இவர் இலங்கைக்கும் வருகை தந்தார். இலங்கையில் உ. த. ப. இயக்க இலங்கைக் கிளையின் செயற்பாடுகளை நேரில் அறிந்து கொள்ள விருப்பங்கொண்ட இவர் யாழ்ப்பாண மாநிலத்துக்கும் வந்திருந்தார்.

20 - 08 - 2001ல் அன்று உ. த. ப. இன் இலங்கைக் கிளையின் ஆட்சிக் குழுவினருடன் இவரின் சந்திப்பும் கலந்துரையாடலும் இடம்பெற்றன. இலங்கைக் கிளை ஆற்றிவரும் தமிழ் வளர்ச்சிப் பணிகள் மற்றும் தற்போதையச் செயற்பாடுகள் விரிவாக அலசி ஆராயப்பட்டன.

இலங்கைக்கிளை செய்து வரும் தமிழ்ப் பணிகள் உலகமெல்லாம் வாழும் தமிழ் மக்கள் ஆர்வமுடன் அறிந்து உணரப் படும் நிலைமையைப் பொதுச் செயலாளர் அவர்கள் அங்கே குறிப்பிட்டார். தலைமையகக் கிளை மற்று ஐரோப்பிய ஒன்றியத்தில் உள்ள கிளைகள் போன்ற வற்றின் செயற்பாடுகள் பற்றியும் இவர் விளக்கினார். இலங்கைக் கிளை பல்லாண்டுகளாகச் செய்து வரும் பணிகள் என்றும் பாராட்டப்பட வேண்டியவையென்றும் அவர் சொன்னார் இலங்கைக் கிளை இது காலவரை எதிர் நோக்கிவரும் பிரச்சினைகள் பற்றித் தலைவர், திரு. ஆ. சண்முகலிங்கம் அவர்கள் விரிவாக எடுத்துக் கூறினார்.



பொதுச் செயலாளர் உ.த.ப. இயக்க இலங்கைக் கிளைப் பிரமுகர்களுடனான சந்திப்பில் எடுத்தபடம் இடமிருந்து வலம் செ. பரமநாதன், இ. சற்குருநாதன், ஆ. சண்முகலிங்கம், பொதுச்செயலாளர் துரை கணேசலிங்கம், இ. தங்கோபால், சி. வ. ஆறுமுகசாமி, மு. ஜெயந்திகுமார், ஆகியோர் காணப்படுகின்றனர்.

இதே நேரம் உ.த.ப. இன் உலக நாட்டுக்கிளைகளின் உறவுப்பணிகள் திருப்திகரமாக இல்லையென்ற தலைவரின் கருத்தை பொதுச்செயலாளர் அவர்கள் ஏற்றுக்கொண்டார். உ.த.ப. இயக்கத்தின் ஐரோப்பிய ஒன்றியத்தின் சார்பில் பொதுச்செயலாளர் அவர்களின் பொறுப்பின் கீழ் தமிழ்மணி, குறள்மணி கல்வித்திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. இந்தக் கல்வித்திட்டத்தில் சேர்ந்து படித்த பலர் தமிழ் மணி, குறள் மணிப் பட்டங்களைப் பெற்றுள்ளனர். இன்னும் பலர் இந்தப் பட்டங்கள் பெறப் படித்துக் கொண்டிருக்கிறார்கள்.

2002ம் ஆண்டில் சைவசமயப் பரீட்சை, சைவப்புலவர் பரீட்சை இரண்டையும் ஐரோப்பாவில் தொடங்க வேண்டும் என்ற பொதுச் செயலாளர் அவர்களின் விருப்பத்தை ஆட்சிக்குழு ஏற்றுக் கொண்டது. இலங்கைக் கிளையின் கல்விப்பகுதி இந்தப் பரீட்சைகளை நடாத்த ஏற்பாடுகளைச்செய்யவுள்ளது. அத்தோடு சென்னைப் பல்கலைக் கழகத்தின் அஞ்சல் வழிப் பட்டக்கல்வி மற்றும் தமிழ் மணி, குறள் மணி பட்டத்தேர்வுகளையும் இலங்கைக் கிளை ஆரம்பித்து நடைமுறைப் படுத்த வேண்டுமெனறும் பொதுச்செயலாளர் கேட்டுக்கொண்டார்.

இலங்கைக் கிளைக்கு நிரந்தரமான பணிமனை இல்லாத விடயம் ஆராயப்பட்டது. இந்தப் பணிமனை இல்லாமையால் கிளையின்



பணிகளுக்கு இருந்துவரும் பிரச்சினைகளை தலைவர் ஆ. சண்முகலிங்கம் குறிப்பிட்டதுடன் இதற்கான நிதி உதவியைத் தலைமையகம் வழங்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார். தான் ஐரோப்பாவுக்குப் போனதும் பொதுக் குழுவைக் கூட்டி ஆராய்ந்து நிதியுதவி செய்யும் விடயத்தை முடிவு செய்து நிதி உதவி செய்வதாக பொதுச் செயலாளர் உறுதியளித்தார். உலகத் தமிழர் குரல் ஏட்டின் தொடர்ச்சியான வெளியீட்டின் அவசியத்தைக் குறிப்பிட்ட அவர் அதற்கும் நிதி உதவி செய்வதற்கு ஏற்ற நடவடிக்கை எடுப்பதாகக் கூறினார். பணி மனை அமைத்தல், உலகத் தமிழர் குரல் வெளியீடு மற்றும் உ.த.ப. இயக்கத்தின் எதிர்காலச் செயற்பாடுகள் ஆகியவை பற்றியும், தலைவர் ஆ. சண்முகலிங்கம், செயலாளர் இ. தவகோபால், பொருளாளர். செ.பரமநாதன் ஆகியோர் கருத்துக்களைத் தெரிவித்தனர். ஜேர்மனியிலிருந்து பொதுச் செயலாளர் திரு. துரை கணேஷலிங்கம் அவர்கள் செய்து வரும் சிறப்பான தமிழ்ப் பணிகளையிட்டுத் தலைவர் ஆ. சண்முகலிங்கம் பாராட்டிப் பேசினார். பொதுச் செயலாளர் அவர்களின் இலங்கைக்கான வருகை, இலங்கைக்கிளைப் பிரமுகர்களுடனான சந்திப்பு ஆகியவை வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாகும். பொதுச் செயலாளரின் யாழ்ப்பாண வருகையும், இலங்கைக் கிளை ஆட்சிக் குழுவினருடனான சந்திப்பும் கலந்துரையாடலும், உ.த.ப.இன் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவு மென்று தலைவர் ஆ. சண்முகலிங்கம் பாராட்டிச் சீராட்டினார். அப்போது அவசியமாகவும் அவசரமாகவும் செய்ய வேண்டிய பணிகள் தொடர்பான பல தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. இவ்வற்றைத் தயாரித்து விரைவில் தமக்கு அனுப்பும் படி பொதுச் செயலாளர் கேட்டுக்கொண்டார். இந்தச் சந்திப்பிலும் கலந்துரையாடலிலும் கிளையின் ஆட்சிக் குழுப் பிரமுகர்கள் திரு. மு. ஜெயந்திகுமார், திரு.சி.வ. ஆறுமுகசாமி, டாக்டர் திரு. இ. சற்குருநாதன், தமிழ்ப்பணிச் செல்வர் திரு ஆ. சண்முகலிங்கம், செயலாளர் திரு. இ.தவகோபால், பொருளாளர் கவிஞர் செ. பரமநாதன் ஆகியோர் கலந்து சிறப்பித்தார்கள்.

அடுத்த நாள், பொதுச் செயலாளர் அவர்கள், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் பேராசிரியர் திரு. பொ. பாலசுந்தரம்பிள்ளை அவர்களைச் சந்தித்து, தமிழ்க் கல்விப் பணி தொடர்பான விடயங்களையிட்டு கலந்துரையாடினார். உ.த.ப இயக்கத்தின் கல்விப் பணிகளுக்கு ஆலோசனை வழங்கும் படியும் அவர் துணை வேந்தரிடம் கேட்டுக் கொண்டார்.

சுபம்

## தண்டமிழ் வேலி

பரிபாடல்தான் இன்றும் ஓர் அரிய உண்மையை நமக்கு உணர்த்துகின்றது. தமிழனது நாட்டினை அரசியல் வேலியாகக்காக்குமோ எனில் அது காத்தற்கு ஆற்றலுடைதன்று. வேறு எந்த வகையிலும் தமிழ் நிலத்தில் எல்லை சுருங்காமல் காத்தலியலாது. ஒரே ஒரு வழிதான் உண்டு.

தமிழை எந்த எல்லை வரை தமிழன் பரப்பி பேச்சு வழக்கில் வைத்திருக்கிறானோ அந்த எல்லை எல்லை வரை தமிழ் வேலியாக நின்று நாட்டினையும் மக்களையும் காக்குமென்று முன்பே அறிவுறுத்திய பெருமை பரிபாடலுக்குண்டு. தமிழன் தமிழைப் பேசாமல், தமிழைப் பரப்பாமல் இருப்பானென்றால், பிற மொழிகள் தமிழ் நிலத்தில் புகுந்து கால் கொண்டு தமிழ் நிலத்தைப் பிறருக்கு உரியதாக்கிவிடு மென்றும் அதனால் அங்கு வாழும் தமிழர்களும், தமிழர்களல்லாதாரும் திக்கற்றோர்களாகி அகதிகளாகிப் போக்கும் புகலிடமுமின்றித் தினற நேரிடுமென்று கருதிய பண்டையாசிரியர் தண்டமிழ் வேலி தமிழ் நாட்டகமெல்லாம்'' என்று குறிப்பிட்டு அறிவுறுத்தினர்.

"அரைச வேலியல்லது யாவதும்

புரை தீர் வேலிஇல'' எனப்பொழிந்து அரசியலே தமிழ் நிலத்தைக் காக்குமென நினைப்பாருமுளர். அரசியல் காலத்திற்கேற்ப மாறும். வளரும் தளரும் அழியும் மீண்டும் முளைக்கும். மொழி அத்தகையதன்று மொழி சுருங்கின் மொழியை உடைய மக்கள் வாழ்வும் வளமும் ஆண்மையும் அறிவும் சுருங்கும். அவ்வாறு மொழியைச் சுருங்க விடாமல் தமிழக நாட்டின் ஓரங்களிலெல்லாம் தமிழை நன்கு நிலைபெறச் செய்து பரப்பிப் பிற மொழிகளாகிய பகைகள் உட்புகுந்து நாட்டினை நச்சுத் தன்மையாக்காத வண்ணம் காத்தல் வேண்டும் என்று கருதியே தமிழ் நாட்டகமெல்லாம் தண்டமிழ் வேலி என்று கூறினார் என்பதைத் தமிழர்கள் உணர்தல் வேண்டும். உணராவிடின் தங்கள் நிலத்திற்கும் வீட்டிற்கும் மற்றப் பொருள்களுக்கும் வரம்பு எல்லையும் உரிமை எழுத்துக்களும் வைத்திருந்து பாதுகாத்தாலும், அவைகளெல்லாம் இருந்தவண்ணம் இருக்க இவர்கள் எந்த வண்ணம் மானார்களென்று காணவொண்ணாத வண்ணமாகத் தமிழ் நாட்டை இழக்க நேரிடும் பரிபாடல் கூறிய எச்சரிக்கையை அன்றைக்கே கொள்ளாத காரணத்தால், தமிழ் நிலம் சுருங்க நேரிட்டது. இனிமேலாவது தமிழர்களுக்கு உண்மையான உணர்ச்சி வருமா? அல்லது தனி நலந்தான் தளிர்க்குமா? என்பது மேற்கொண்டு காலப்போக்கில் காணவேண்டுவதொன்று.

**வித்துவான் திரு. ந. சேதுரகுநாதன் — விருதுநகர்**
**(பரிபாடல் சொற்பொழிவுகள் நூலிலிருந்து — 1956)**



# தென்னாடுடைய சிவனே, எந்நாட்டவர்க்கும் இறைவன்

மதிவாணர் செ. மதுசூதனன் கோண்டாவில் கிழக்கு, யாழ்ப்பாணம்.

கடவுள் உருவம், அருவுருவம், அருவம் ஆகிய திருமேனிகளைக் கொண்டு அருள்புரிகின்றார் என்பது சைவசித்தாந்த மரபு, கூத்தப்பெருமான் (நடராஜ வடிவம்) என்ற உருவத் திருமேனியிலும், சிவலிங்கம் என்ற அருவுருவத் திருமேனியிலும் நீர்,மலர், பச்சிலை சாத்தி தூப, தீபம் காட்டி பண்ணிசைத்துப் பாடி வழிபடும். வழக்குப் பண்டைத் தமிழர்களிடையிற் காணப்பட்டது எனலாம். பிறவாயாக்கைப் பெரியோனாகிய சிவனையே சைவ சித்தாந்தம் முழு முதற்கடவுளாகக் கொள்கின்றது. சிவன் மாதொரு பாகனாகவேயுள்ள பெருமான். "ஒருவாயினை மானாங்காரத்து ஈரியப்பாவொடு விண்முதல் பூதலம் ஒன்றிய விருசுடர் உம்பர்கள் பிறவும் படைத்தளித்தழிப்பமும் மூர்த்திகளாயினை, இருவரோடொருவனாகி நின்றனை'' என்று திருஞானசம்பந்தர் எம்பெருமானின் நுண்மையை விளக்குகின்றார்.

நம் முன்னோர் கடவுள் ஒருவர் என்ற கொள்கையில் மிகவும் உறுதியாகவிருந்தார்கள். இறைவன் முதலும் முடிவு மான சிவன் என்றே கொண்டனர். "சித்தத்தை ஒன்றவைத்தார். சிவமதே நினைய வைத்தார். சென்று நாம் சிறு தெய்வம் சேர்வோம் அல்லோம். சிவபெருமான் திருவடியே சேரப் பெற்றோம்'' என்பது அப்பரின் அருள் வாக்கு. சிலர் கடவுள் மனிதனாகப் பிறந்தவர். மனித அவதாரம் எடுத்தவர் என்பர். மனிதனாகப் பிறந்தவர் மனிதனே தான் அவர் கடவுளாகார் என்பது பண்டைய சைவ நெறி. "இருசுடரோடு இயமானன் ஐம்பூதம் என்னும் எட்டுவகையும், உயிரும், யாக்கையுமாய்க் காட்டி நிற்போனும், கலையுருவினோனும், படைத்து விளையாடும் பண்பினோனும், துடைத்துத் துயர்தீர் தோற்றத் தோனும், தன்னில் தானொன்றிலோனும் அன்னோன் இறைவன். "அவனே ஈசன்'' (சிவன் என்று மணிமேகலைகாலத்துச் சைவவாதி மணிமேகலைக்கு விளக்குவதும் உற்று நோக்கற்பாலது.

மணிமேகலை காலத்தில் தென்னாட்டில் வைதீக மார்க்கத்து அளவைவாதி, சைவவாதி, பிரமவாதி, வைணவவாதி, வேதவாதி, ஆசிவகவாதி, நிகண்டவாதி, சாங்கியவாதி, வைசேடிகவாதி, புத்தவாதி ஆகிய பல்வேறு சமயக் கணக்கர்கள் காணப்பட்டனர்.

சயப்பிரத்தியம்அதாவது காட்சி அளைவையை மட்டும் கொண்ட பிருகற்பதியின் உலோகாயதம், அனுமானம் + காட்சி அளவைகளைக் கொண்ட சின்ன என்னும் ஆதிபுத்தனின் பௌத்தம், சாத்திரம் (ஆகமம்) + காட்சி + அனுமானம் போன்ற அளவைகளைக் கொண்ட கபிலனின் சாங்கியம், உவமானம் + ஆகமம் + காட்சி + அனுமானம் போன்ற அளைவைகளையுடைய அக்கபாதனின் நையாயிகம், அருத்தாபத்தி + உவமானம் + ஆகமம் + காட்சி + அனுமானம் ஆகியவற்றை உற்றடக்கிய கணநாதனின் வைசேடிகம், அபாவம் + உவமானம் + ஆகமம் + காட்சி + அனுமானம் + அருத்தாபத்தி என்னும் அளவைகளைக் கொண்ட சைமினியின் மீமாஞ்சகம் ஆகிய மதங்கள் சிறப்புற்று விளங்கின. இயல்பு, ஐதீகம், மீட்சி, உள்ளநெறி ஆகிய நான்கும் வழக்கொழிந்திருந்தன. இவை மணிமேகலையில் தெரிவிக்கப்படுகின்றன.

“அணிகளர் அரவின் அறிதுயில் அமர்ந்த மணிவண்ணன் கோட்டம் வலஞ்செயாக் கழிந்து, பனை ஐந்து ஓங்கிய பாசிலைப்போதி அணிதிகழ் நிழல் அறவோன் திருமொழி அந்தா சாரிகள் அறைந்தனர். சாற்றும், இந்திரவிகாரம் ஏழ் உடன் போகி புலஷி ஊண் துறந்து பொய்யா விரதத்து . அவலநீத்து அறிந்து அடங்கிய கொள்ள மெய்வகை உணர்ந்த விழுமியோர் குழீகிய ஐவகை நன்றி அருகத்தானத்துச் சந்தி ஐந்தும் தம்முடன கூடி வந்து தலைமயங்கிய வான் பெரமன்றத்துப் பொலம் பூம் பிண்டி நலங்கிளர் கொழு நிழல் நீர் அணி விழவினும், நெடுந் தோர் விழவினும் சாரணர் வடுஉம் தகுதியுண்டாம் என, உலக நோன்பிகள் ஒருங்குடன் இட்ட இலகு ஒளிச் சிலாதலம் தொழுதுவலம் கொண்டு” கண்ணகியும், கோவலனும், கவுந்தியடிகளும் புகாரைவிட்டு வெளியேறினர் என்று சிலப்பதிகாரம், புகார்க் காண்டம், நாடுகாண் காதை (9 - 25) யில் சொல்லப்பட்டுள்ள மேற்படி கருத்துக்களினால் அன்றைய மதவழிபாட்டு நிலையை ஊகிக்க முடிகின்றது.



“இந்தியாவின் பழைய வழிபாட்டு மரபை (ஏனைய மதங்களை) இஸ்லாமிய கிறிஸ்தவ மதங்களிலிருந்து வேறுபடுத்திக் காட்டப் பிரித்தானியர் பயன்படுத்திய சொல்லே “இந்துமதம்” என்ற பெயர். இலங்கைத் தமிழர்களின் வழிபாடுகளுள் சிவ வழிபாடு தமிழர்களின் வழிபாடுகளுள் சிவவழிபாடு மிகத் தொன்மையானது. கி.மு 4ம் நூற்றாண்டிலிருந்து இலங்கையில் ஆட்சி புரிந்த மன்னர்கள் சிலரின் பெயரில் “சிவ” என்ற சொல் முதன்மைப் படுத்தப்பட்டுள்ளது. கி.மு. 3ம் நூற்றாண்டிலிருந்து கிடைக்கும் 80 கல்வெட்டுகளில் அக்கால சமூகத்தினர் “சிவ' என்ற பெயரைப் பயன்படுத்தியுள்ளனர். இதற்கு இம் மக்கள் “சிவ' வழிபாட்டுடன் கொண்டிருந்த ஈடுபாடே காரணம் எனக் கூறப்படுகிறது. இதற்குப் பண்டைய நாணயங்களில் வரும் பெயர்களும், அவற்றில் இடம் பெற்ற சமயச் சின்னங்களும் மேலும் சான்றாக அமைகின்றன. பண்டைய தமிழ் நாணயங்களில் வரும் சிவனுக்குரிய சின்னங்களுள் சிவலிங்கம் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கது. புறநானூறு “ஏற்றுவன் உயரிய எரிமருள் அவிர் சடை மாற்றரும் கணிச்சி மணிமிடற்றோன்” என்றும் “ஒரேகணைகொண்டு முப்புரத்தை எரித்த அமரர்க்கு வெற்றி தந்த கறைமிடற்றண்ணல்” என்றும் கூறுகிறது” என்று “தொல்லியல் நோக்கில் ஈழுத் தமிழர்களின் பண்டைய மதங்கள் பற்றிய ஆய்வில்” கலாநிதி ப. புஷ்பரட்ணம் குறிப்பிடுவதிலிருந்து சைவம் தமிழர்களின் தனி மதமாக விருந்ததை உணரலாம். சிவ வழிபாட்டைப் போல் முருக வழிபாடும் ஈழத் தமிழரிடையே முக்கியத்துவம் பெற்றிருந்ததெனலாம். இம்முருக வழிபாடு வட இந்திய வழிபாட்டுடன் இணைந்து காலப் போக்கில் குமரக்கடவுள் (ஸ்கந்த) வழிபாடு என்ற பெயரையும் பெற்ற தெனலாம். சமயப் பணி, கல்விப் பணியுடன் சைவநெறியில் வழுவாதொழுகிய ஆறுமுக நாவலர், சிவ தீட்சையில்லாத வைதீகப் பிராமணரிடத்தே விபூதி வாங்குவதில்லை. இதனாற் கோபங் கொண்ட வைதீகப் பிராமணர்கள் இவரையும் சிவாகமங்களையும் நிந்தித்தனர். சிவாகம நிந்தனையைப் பொறுக்கமாட்டாத நாவலர் 1863 மாசியில் சைவப்பிரகாச வித்தியாசாலையில் வேதம் பொது நூலென்றும் ஆகமம் சிறப்பு நூலென்றும் பிரமாணங்களுடன் பிரசங்கம் செய்தார். இதன் விளைவாகச் சிவப் பிராமணர்களே மதிக்கப்பட்டனர். வைதீகப்

பிராமணர்களுள் அநேகர் சிவ தீட்சை பெற்றுச் சிவ பூசை செய்து சிவாகம நெறியில் ஒழுகத் தொடங்கினார்கள். யாழ்ப்பாண மெங்கும், "சிவாகம ஆராய்ச்சியும், சிவ பூசைச் சிறப்பும், தேவாரத் திருவசக பாராயண ஓசையும், சிவ பூசையின் போது ஒலிக்கும் மணியோசையும் பரவத் தொடங்கின. நாவலர் வரலாற்றுக் குறிப்பை அடியிற் காண்க.

"சிறுதெய்வழிபாடு சைவ நெறியின் உயிர் நாடியாகிய ஒரு தெய்வக் கொள்கையை சீர்குலைக்கிறது. அதே போன்று சிவனையன்றி வேறு தெய்வத்தை வழிபடாத தென்னாட்டு அந்தணரையும், சிவாச்சாரியார்களையும் வட இந்தியர்களின் வழிபாட்டு முறை விழுங்கிவிட்டது. வடமொழிப் புராணங்களில் மூவரும், தேவரும், இயற்கைச் சக்திகளும் கூட மனிதரைப் போல வாழ்க்கை நடத்துவதாகச் சித்தரிக்கப்பட்டுள்ளன. வடவாரியர் பல தெய்வக் கொள்கையுடையவராயிருந்தனர். தமிழகத்தில் அவர்களின் ஆதிக்கம் வலுவடைந்த பின்னர் தான், முழுமுதற் கடவுளாகிய சிவனை உருத்திரன் என்ற சிறு தெய்வமாக மாற்றிவிட்டார்கள். திருமுறைகளில் எழில்மகள், மலர்மகள், சயமகள், புகழ்மகள், திருமகள் என வருவன சிறுதெய் வழிபாட்டினையுடைய ஆரிய வேத நெறியினர் நினைப்பது போன்று சக்திகளைக் குறிப்பனவல்ல. அவை உலகியல் போகங்களைக் குறிப்பனவல்ல. அவை உலகியலில் போகங்களின் உருவகமே. சிவன் மீது அடியார்கள் ஓதிய பாடல்களைக் கற்பவர், கேட்பவர் இப் போகங்களுக்கெல்லாம் உரித்தாவர்".

கிறிஸ்தவர்கள் இறைவன் குறியெதுவும் இல்லாத அருபியாக எட்டாத ஒளியில் பரமண்டலத்தில் இருக்கிறார் என்பர், இஸ்லாமியர் இறைவன் சேய்மையிலுள்ளவர், அருபியென்றும், அவரைக் குறிப்பதற்கு ஏதும் அடையாளம் வைப்பினும் அது குற்றமான செயல் என்றும் கூறுவர். பௌத்த மதம் கடவுளை மறுக்கிறது. சமணமும் அத்தகையதே.

அருவுருவ வடிவாகிய சிவலிங்க வழிபாடே உருவ வழிபாட்டின் ஆரம்பம் எனலாம். இதுவே பண்டைத் தமிழர்களின் வழிபாடாகவும் இருந்தது அதன்பின், ஆண், பெண் தன்மை அனைத்தும் கலந்த



அர்த்தநாரி வடிவம் தான் ஆதியில் இறைவனுக்குண்டான உருவமாயிற்று "நீலமேனி வாலிழைபாகத்து ஒருவன் இருதாழ் நிழற் கீழ் மூவகையுலகும் முகிழ்த்தன முறையே" என்று சங்க நூலாகிய ஐங்குறு நூறு சாற்றுகிறது. இறைவனிடம் அருள் இணைந்திருக்கிறது. இறைவனே அருள் மயமானவன், அருள வெளிப்படும் போது அவன் செயற்படுகின்றான். அந்த அருளைத்தான் சக்தி என்கின்றோம். சிவமும், சக்தியும் வேறுபாடு இன்றி ஒருவரோடொருவர் இணைந்துள்ளனர். இதனை "அவ்வருதன்னுள் அடக்கிக் கரக்கினும் கரக்கும்" என்று புறநானூறு புகல்கின்றது. இந்த உருவையே சிவனும் உமையும் என வேறு வேறாகப் பேசுகின்றனர்.

ஆறு சமயங்கள் தோன்றித் தெய்வத்தை ஆறுருவாக்கிக் கொண்டனர். சிவத்தை ஆணாகவும் சக்தியைப் பெண்ணாகவும் ஆக்கி மகிழ்ந்தவர்கள், சக்தியினின்றும் ஆண் தன்மையைப் பிரித்துப் பெரிதுபடுத்தி, நீலமேனி வாலிழையாளை நீலமேனிக் கோலமான் நெடுமாலாக்கி மகிழுந்தனர். நெடுமாலை (மகாவிஷ்ணு)ப் பரம் பொருளாகவும், அவன் திருவடியே அவனை அடைவதற்கு உபாயமாகவும் அறிதியிட்டும் கூறும் சமயமாக வைணவத்தை ஆக்கிக் கொண்டார்கள். நிற்கின்றதெல்லாம் நெடுமால் என்றிருப்பவன் வைஷ்ணவன். "வாசுதேவ சர்வம்" என்று கீதையில் கிருஷ்ணன் கூறுகின்றார். "உண்ணும் சோறும், பருகும் நீரும் தின்னும் வெற்றிலையும் எல்லாம் திருமால்" என்று நம்மாழ்வார் பாடுவார். அவரே "உரு ஆகிய ஆறு சமயங்கட்கு எல்லாம் பொருளாகி நின்றான். அவன் எல்லாப் பொருட்கும் அரு ஆகிய ஆதியைத் ஓதுவர்கட்கு எல்லாம் கருஆகின கண்ணனைக் கண்டு கொண்டேனே" என்றும் திருமாலின் அவதாரமாகிய கண்ணனைத் தோன்றிய ஆறு வைதீக சமயங்களுக்கு எல்லாம் ஒப்ப நின்றவன் என்றும் நாராயணனுக்கு ஏற்றம் தரும் வகையில் கூறுகின்றார்.

"பிணங்களிடு காடதனுள் நடமாடும் பிஞ்ஞகனோடு இணங்கு திருச் சக்கரத்தெம் பெருமாற்கிடம் - வகும்பில் கலங்களியங்கும் மல்லைக் கடன்மல்லைத் தலசயன், வணங்கு மனத்தாரவரை

வணங்கென்றன் மடநெஞ்சே" என்று திருமங்கையாழ்வார் அரனையும் அரியையும் ஒருவாய்க்காண விழைகின்றார்.

"சங்கமும் சங்கரமும் தாமரைக்கையேந்திச்
செங்கண் அரிமால் சினவிடைமேல் நின்றாயால்
கங்கை முடிக்கணிந்த கண்ணுதலோன் பாகத்து
மங்கையுருவாய் மறையேத்தவே நிற்பாய்"

என்று சிலப்பதிகாரம் கூறுகின்றது. சங்கும், சக்கரமும் திருமாலுக்குரியவை. எனவே, சிவனும், சக்தியும், திருமாலும் என்றெனக் கண்டு கூறுகின்றார் இளங்கோவடிகள். "படைத்தளித்த தழிப்பமும் மூர்த்திகளாயினை" என்று திருஞானசம்பந்தர் கூறுகின்றார். முந்திய முதல் நடு இறுதியுமானாய் மூவருமறிகிலர் யாவர்மற்றறிவார் என்று மணிவாசகர் சொல்கிறார். இவை, மூவராலும் அறிய முடியாத பரம் பொருளே மூவராகவும் வந்து, ஆதியும் அந்தமும் ஆகி விளங்குகின்றது என்ற பொருளை உணர்த்துகின்றன.

நீலமேனி வாலிழைபாபத்து ஒருவன் என்றும், மாதிருக்கும் பாதியியன் என்றும் கூறப்படும் கோலத்தை - கூத்தப் பெருமானை ஏத்தித்துதித்த மாணிக்கவாசகர் தொன்மைக் கோலம் என்கின்றார் இவ்வகையால் தென்னாடுடைய சிவனே என்னாட்டவர்க்கும் இறைவன் என்பது தெளிவு.

**எட்டாவது உலகத்தமிழ் மகாநாடு தென்னாபிரிக்காவில்**

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் 8வது உலக மகாநாடு இந்த ஆண்டு டிசம்பர் மாதத்தில் 14, 15, 16ம் திகதிகளில் தென்னாபிரிக்க டர்பன் மாநிலத்தில் சிறப்பாக நடந்தேறியது. அமெரிக்கா, கனடா, டென்மார்க், பிரான்ஸ், ஜேர்மனி, இந்திய, மலேசியா போன்ற நாடுகளிலிருந்து பல பெரியார்கள் மகாநாட்டுக்கு வந்து கலந்து கொண்டார்கள்.

மகாநாட்டு ஏற்பாடுகளைத் தென்னாபிரிக்கா தமிழர் கூட்டுணைப்பு கழகம் பொறுப்பேற்றுச் செய்திருந்தது. இந்த அமைப்பின் தலைவர் திரு. மிக்கிசெட்டி அவர்கள் மகாநட்டுக்குத் தலைமை தாங்கினார். திருநாகலிங்கம் முதலி அவர்கள் மகாநட்டுச் செயற்பாடுகளுக்கு அமையச்செயலராகப் பணிபுரிந்தார். உ.த.ப. இயக்கத்தலைவர் திரு. சின்னத்தம்பி செல்லையா அவர்கள் உலகத்தமிழர் பொருளாதாரம் என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார் மகாநட்டில் 500 பேராளர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். மகாநாட்டில் இசை. நடனம், நாடகம் போன்றபாரம்பரிய நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. மகாநாட்டில் உ.தமிழர்களுக்கு பொதுவான் தேசியகீதம் ஒன்று இசைக்கப்பட்டுத் தமிழ் உலகினுக்கு வெளியிடப்பட்டது.



# பிற நாடுகளில் தமிழும் தமிழ்ப் பண்பாடும்

ஊர், சால்டிசு என்னும் பாபிலானிய (ஈராக்) நகரங்களில் மேற்கொள்ளப் பட்ட புதைபொருள் ஆய்வுகள் ஹீப்று, கிரேக்கம் போன்ற மொழிகளில் தமிழ்ச் சொற்கள் கடன் பெறப்பட்டதைத் தெரிவிக்கின்றது. இதனால் திராவிடரின் தொடர்புகள் பல்லாயிரமாண்டு காலமாக இருந்துள்ளது என்பதைக் காட்டுகின்றது. பர்மா தேசத்து தேக்கம் மரப் பலகைகள் 'ஊர்' என்னும் நகரத்தில் காணப்பட்டது. கப்பல் கட்டும் தொழிலில் தென்னிந்தியர் சிறந்திருந்த காரணத்தால் இவை அந்தத் துறைமுக நகருக்குக் கொண்டு செல்லப்பட்டிருக்கலாம்.

ஹரப்பா மொஹஞ்சதரோ போன்ற சிந்துவெளி நகரங்களில் காணப்பட்ட நாகரிகத் தடயங்கள் மூலமாக, எகிப்து, பாபிலோனியா போன்ற நாடுகளிலிருந்து கிழக்கே நாகரிகம் பரவவில்லை. கிழக்கில் இருந்த பாரிய பண்பாட்டுக் கூறுகளே பின்னர் மேற்கு நோக்கி பரவியது என்பதை அறிஞர் கண்டுள்ளனர், அதோடு வேதகால மக்களாகிய ஆரியர் இந்தியாவிற்கு நாகரிகத்தைக் கற்பிக்கவில்லை. மாறாக இங்கிருந்த 'தாசியூஸ்' என்றழைக்கப்பட்ட திராவிடரிடமிருந்தே அவர்கள் பெற்றுக் கொண்டனர் என்பதே. சிவன், காளி, வழிபாடும் ஆரியர் இந்தியாவிற்குள் நுழைய முன்னரே இருந்துள்ளது.

வட பிலிப்பைன் தீவுகளுக்கும் தமிழ் நாட்டிற்கும் வாணிபத் தொடர்புகள் இருந்துள்ளதும் தெரிய வந்துள்ளது. வட பிலிப்பைன்ஸ், மலாயா முதலிய இடங்களில் திராவிடருக்கே உரிய பண்பாட்டுக் கோலமான இறந்தோரை அடக்கம் செய்யும் ஈமத்தாழிகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவை, ஒரு தமிழ்ச் சமூகம் இவ்விடங்களில் ஆதிகாலம் தொட்டு நிலை கொண்டிருந்தது பின்னர் அவ்வூர் மக்களோடு சங்கமாகி விட்டனர் என்பதையே காட்டும்.

கி.மு 1200 ஆம் ஆண்டளவில் ஆதிச்ச நல்லூர் பகுதிகளில் நெல் அறுவடை செய்யப்பட்டமை தெரிந்துள்ளது. இங்கேதான் இரும்பு உலோகத்தின் பாவனையும் முதல் முதல் தெரியப்பட்டது. இரும்பின் உபயோகமும் நெல் அறுவடை செய்யப்பட்டமை தெரிந்துள்ளது. இரும்பின் உபயோகமும் நெல் உற்பத்தியும் தமிழ் நாட்டிலிருந்து தான் மேற்கு நாடுகளுக்கும், தென்கிழக்கு ஆசியா நாடுகளுக்கும் பரவியது என்பதற்குப் போதிய சான்றுகள் உள்ளன. இதை 'வரலாற்றுக் காலத்திற்கு முந்தைய இந்தியா' என்ற நூலில் பிக்கொற் என்னும் அறிஞர் தெரிவிக்கிறார். அதோடு இருக்கு வேத காலத்தினருக்கு அரிசியைப் பற்றி எதுவுமே தெரிந்திருக்கவில்லை என்கிறார்.

பர்மா, மலாயா, யாவா முதலிய நாடுகளை ஆட்சி புரிந்த மன்னர்களின் பெயர்கள் 'வர்மன்' என்று முடிவதையும் காணலாம். (ஜெயவர்மன் போன்ற) மலாயாவில் மலாக்கா பேராக், கெட்டா போன்ற இடங்களில் தமிழ் மற்றும் சைவ சமயச் செல்வாக்குகளை முழுமையாக அவதானிக்கலாம் என்று குவாறிச் உவேல்ஸ், ஸ்கொற் போன்ற தொல்பொருள் ஆய்வு வரலாறு ஆகியவற்றில் முன்னோடிகளாகத் திகழ்ந்த அறிஞர் பெருமக்கள் குறிப்பிட்டுள்ளனர். இவ்விடங்களில் நானாதேசி வணிகரும் மணிக் கிராமத்தார் என்று அழைக்கப்படும் பெரும் பெரும் வணிகர் குழாங்கள் (சாத்து) செல்வாக்குப் பெற்றிருந்தன. என்று அந்நாட்டு வரலாறுகளும் பழக்க வழக்கங்களும் அறியத்தருகின்றன. பேராக் மாவட்டத்தில் உள்ள தாக்குவாபா' என்ற இடத்தில் ஒரு தமிழ்க் கல்வெட்டும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இவ்விடத்தில் சிவன் - பார்வதி - ஒரு நடனமாது இவர்களின் சிலைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இது திராவிட இந்தியாவின் மிகப்பிழைய அற்புதப் படைப்பு என்கிறார் லஜொன்குவேர். தாக்குவா பாவில் விஷ்ணுவின் சிலையும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது கி.பி 7 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது என்பர். தாய்லந்து நாட்டில் 'லோகேஸ்வர' (சிவன்) என்னும் சிலையை இளவரசர் டும்றோல் என்பவர் கண்டுபிடித்தார். இதன் அழகு விபரிக்க வொண்ணாத ஒன்று. இந்த நாட்டு முடிசூட்டு வைபவங்களிலும் சைவப் பிராமணரின் பங்கு முக்கியமானதாகும்.



புத்தமதம் இந்நாட்டின் மதமாக இன்று மாறியிருந்தாலும், தாய்லந்து, (சீயம்) நாட்டவரே பிராமணராக தம்மை அழைத்துக் கொண்டாலும் தமிழ்ப பண்பாட்டு நிழற்கோலங்கள் மாறவில்லை. கம்போடிய நாட்டு மன்னரின் முடிசூட்டு விழாக்களில் இடம்பெறும் 'ஊஞ்சல் விழா' வின் போது சிவன் கோவில் முதன்மை அந்தணர் தமிழில் மந்திரம் சொல்வர். அது 'கைலாச வாசலின் கதவுகள் திறப்பதாக' என்ற பொருளை உடையது. ஆனால் இந்த தாய் நாட்டு அந்தணர்களுக்கு தமிழோ சமஸ்கிருதமோ தெரியாது. தினமும் வழிபாட்டுக்குச் சொல்லப்படும் இந்த தமிழும் சமஸ்கிருதமும் சேர்ந்த மந்திரம் தாய் மொழியிலேயே எழுதப்பட்டு படிக்கப்படுகிறது. இதே போல தாய்நாட்டு முடிசூட்டு விழாவில் 'திரியெம்பாவே - திருப்பாவே' யெனப்படும் தமிழ் திருவெம்பாவை திருப்பாவை (மாணிக்கவாசகர் - ஸ்ரீ ஆண்டாள்) ஓதப்படுவதைத் தனிநாயகம் அடிகளார் கேட்டுள்ளார். இந்நாடுகளில் தமிழ்ப் பண்பாட்டின் செறிவை இவர்கள் கொண்டாடும் புத்தாண்டு நாளே எடுத்துக் காட்டுகின்றது. இந்தப் புத்தாண்டு நிர்ணயம் மொஹஞ்சதரோ காலத்திலிருந்து சங்க காலந்தொட்டு வரும் வழக்காகும். சைவப் பிராமணர் என்போர் சங்க இலக்கியங்களில் பேசப்படும் அந்தணரே இவர்கள் திராவிடர் என்பதோடு தமிழருமாவர்.

கடலோடிகளாகவும் வணிகராகவுமிருந்து தமிழ்ப் பண்பாட்டைப் பேணப் பரப்பியோர், வட இந்தியா கோட்பாடுகளின் ஒன்றான கடல் கடப்பது குலவொழுக்கமற்ற செயல் என்பதனால் கரையோர மக்கள் புறக்கணிக்கப்பட்டு பண்பாட்டுப் பரம்பலும் தமிழரது முன்னேற்றமும் தடைப்பட்டுப் போவதாயின என்பது உண்மை. கம்போடிய குமேர் அரசர்கள் தம்மைத் தேவ அரசர்கள் என்று கூறினர். அங்கோர் தொம் என்னும் மாபெரும் நகரை நிர்மாணித்து தமது தலை நகராகக் கொண்டனர். கி.பி 889 தொடக்கம் 1100 வரை இங்கிருந்து இவர்கள் ஆட்சி செய்தனர். இதன் பழைய பெயா யசோதரபுர என்பது. இவர்கள் இந்து சமயத்தையும் சிவ வழிபாட்டையும் போற்றி வளர்த்தனர். தென்னிந்தியப் பிராமணர் ஒருவரை வரவழைத்துத் தன்னை தேவ அரசனாகப் புனிதனாக்கும்படி செய்து ஜாவா நாட்டுக்குக் கீழ் இருந்த நிலையை மாற்றி காம்போஜத்தை தனி

நாடாக்கினான். அக்காலத்தில் ஜாவாவிலும் குமேரியர் ஆட்சியே இருந்துள்ளது. கலை விற்பன்னரை தென்னிந்தியாவிலிருந்து வரவழைத்து தென்னிந்தியாவில் இருப்பது போன்ற கோவில்களைக் கட்டி, மேளதாளங்கள், தேவதாசிகளின் நாட்டியம் போன்றவற்றை அவற்றில் இடம்பெறச் செய்தான். இந்துக் கட்டிடக் கலையும் தமிழும் வடமொழியும் அந்நாட்டு மொழியுடன் பாவிக்கப் பெற்றன. பல்லவ மன்னன் மூன்றாம் நதிவர்மன் காலத்தில் தாய்லாந்து நாட்டின் தலை நகராக அவனிநாரணம் விளங்கிற்று. அக்காலத்தி லிருந்தே தென்னிந்தியப் பண்பாடு பெரு வழக்கத்தில் இருந்துள்ளது. அங்கோர் நகரில் மட்டும் 600 இந்துக் கோவில்கள் கட்டப்பெற்றன. அங்கு சென்ற தமிழர் குமேர் பெண்களை மணந்து தமிழ்க கலைகளையும் வளர்த்தனர். இதற்குச் சுவடிகள் வேண்டியிருந்த தனால் பனை ஓலைக்காக பனைகளை கம்பூச்சியா (கம்போடியா, காம்போஜம்) வெங்கும் நாட்டி வளர்த்தனர். ஒவ்வொரு கோவிலின் முன்னும் பனைகள் வளர்க்கப்பட்டன. நவராத்திரி, திருவெம்பாவை திருப்பாவை முதலிய விழாக்கள் சிறப்பாக கொண்டாடப் பெற்றன.

இந்நகரில் மிகப்பெரிய விஷ்ணு கோயில் ஒன்று கட்டப்பெற்றுள்ளது. இது மேற்கு வாசலையுடையது. ஏனெனில் இலங்கையின் தென்புறமிருந்த குமரிநாட்டில் இருந்த தமிழர் கடற்கோளினால் அழிந்ததற்கு அஞ்சலி செய்யும் பான்மையிலேயே இக்கோவிலின் வாசல் மேற்கு நோக்கியுள்ளது. இக்ககோவிலின் தரை மட்டும் ஒரு சதுர மைலுக்கு மேற்பட்ட பரப்பையுடையது. இக்கோவிலில் எண்ணற்ற தாமரை மொட்டுக்களையுடையது தூண்கள் உள்ளன. இவை ஒவ்வொன்றும் 200 அடி உயரமுடைய தூண்களாகும். இதற்குக் கீழேயுள்ள கோவிலின் நடுப்பகுதியை அடைய 1000 அடி நீளமுள்ள பாலம் ஒன்றின் மூலமே செல்ல முடியும். இக் கோவிலின் அமைப்பு இது ஒரு வானவியல் நிலையமாகவும் இருந்துள்ளது என்பதைத் தெரிவிக்கின்றது. ஒவ்வொரு மார்கழி (டிசம்பர்) மாதமும் 22ந் தேதிகளில் கூடும் உத்தராயண புண்ணிய காலங்களில், இக்கோவிலின் கோபுரமும் இங்கிருந்து மூன்றரை மைல் தொலைவில் உள்ள 'பிரசட்குக்பன் குறோ' கோவிலின் கோபுரமும் சூரியனும் ஒரே நேர் கோட்டில் வரும். மிக அழகான சிற்பங்களையுடையது இக்கோவில். இக்கோவிலில் ஒரே காலத்தில் 5 இலட்சம் மக்கள் கூடியிருக்க கூடிய பெரிய மண்டபமும் உள்ளது. தென்னிந்தியப் பண்பாடும் பழைய குமேர் மொழியும் அங்கே 1000 ஆண்டுகளுக்கு மேலாக நிலைத்து நிற்கின்றன.





ஆஸ்திரேலியப் பழங்குடி மக்களுக்கும் பழந்தமிழருக்கும் தொடர்பு இருந்துள்ளது. 30,000 ஆண்டுகளுக்கு முன் இந்தோனேஷியா முதலிய நாடுகளிலிரந்து இவர்கள் ஆஸ்திரேலியாவுக்குச் சென்றுள்ளனர் என்று ஆய்வாளர் கருதுகின்றனர். அக்காலத்தில் கடல் மட்டம் இப்போதுள்ளதைவிட 400 அடி தொடக்கம் 600அடிவரை தாழ்ந்திருந்துள்ளது. இதனால் நிலங்கள் அமிழ்ந்து பல தனித்தனி தீவுகள், நாடுகள் உண்டாகின. ஆஸ்திரேலியாவும் அவ்வாறே இலங்கையைப் போல தனித் தீவாகியது. இந்த ஆஸ்திரேலியப் பழங்குடி மக்கள் தமிழருடைய பழக்க வழக்கங்களையே கைக்கொண்டுள்ளனர். அத்தை மகளைத் திருமணம் செய்யும் முறைப் பெண் முறை பூமெராங் என்னும் வளை தடியின் பாவனை (இது புதுக்கோட்டைப் பகுதியில் உள்ள வளைதடி தான் என்கிறார் அறிஞர் இராமச்சந்திரர் தீட்சதர்) போன்ற பழக்கவழக்கங்கள், அவர்கள் எல்லோரும் இந்தியா, இலங்கையிலிருந்து சென்ற திராவிடரே என்பதை உறுதி செய்கிறது என்கிறார் டக்ளாஸ் லொக்வுட்.

தாயின் உடன் பிறந்த மாமன் மகளை அல்லது மகனை, அல்லது தந்தையின் உடன் பிறந்த அத்தை மகளை அல்லது மகனை மணம் செய்வது மச்சான் - மச்சினி மணவிதி என்பர். இதுவே திராவிடர் உறவு முறை, இந்தோ ஆரிய முறைகள் வேறானவை. அமெரிக்க செவ்விந்தியரான இரோகோ இனத்தவர், பொலிவியாவின் சிறியனோ இனத்தவர் போன்றோரும் திராவிடர் உறவு முறைகளையே பின்பற்றுகின்றனர் என்று அறிஞர் லூயிஹென்றிமார்கன் கண்டுள்ளார். இவர் இந்த அமெரிக்க இந்தியர் 40,000 வருடங்களுக்கு முன்னரே அமெரிக்க சென்றனர் என்கிறார்.

திராவிடர் உறவு முறை விந்திய மலைக்குத் தெற்கில் உள்ள இந்திய நாடெங்கும் வழக்கிலுள்ளது. வடக்கே குஜராத்தில் 'மேர்' சாதியினரும், மத்திய இந்தியாவில் கோந்த, பைகா, குருத் ஆகிய பழங்குடியினரும், மகாராட்டிரத்தில் பெரும்பாலானோரும், பீகாரில் மாடோ மொழி போசுவோரும், இம்முறையைப் பின்பற்றுவோராவர். இலங்கை சிங்களவரும் இதே முறையைப் பின்பற்றுகின்றர். வடஇந்தியாவிலிருந்து இலங்கைக்கு மிகக் குறைந்த தொகையினரே சென்றனர் என்றும், அங்கு முன்னரே இருந்த திராவிடத் தமிழரோடு கலந்து உருவான காரணத்தினால் சிங்கள இனத்தினர் இன்றும் திராவிடர் உறவ முறைமற்றும் தமிழர் பழக்க வழக்கங்களையும் கடைப்பிடிக்கின்றனர் என்று அறிஞர் ட்ரௌமன் எடுத்தக் காட்டியுள்ளார். பழம்பெரும் சிஙகள எழுத்தாளரும் அறிஞருமான முதலியார் று.கு. குணவர்த்தனர் 'சிங்களவர் முழுக்க முழுக்க ஒரு சிறு ஆரியக் குழுவோடு கூடிய திராவிட இனத்தவரே. சிங்கள மொழிக்கு மூலமாக இருந்து அதன் மாற்றத்திற்கும் வளத்திற்கும் துணை புரிந்தது எது என்று இப்போது எனக்குத் தெரிகிறது - இயக்கா நாகா (பூர்வ இலங்கை ஆதிவாசிகள்) மற்றும் விஜயனும் அவனத குழுவில் இருந்தோரும், மதுரையிலிருந்த கொண்டு வரப்பட்ட பெண்களும் ஆண்களும் எல்லோரும் திராவிட இனத்தவரே' என்று சொல்கிறார்.

மெச்சிக்கோவில் மயன் இன மக்களின் பாடல்களில் பனந்தலர் என்னும் ஊரிலிருந்து கீழைத் தேயத்தார் வந்து இங்கே இறங்கினர் என்று கூறப்படுகிறது. மக்கென்ஸி தமது 'இந்திய நாகரும் மெரிக்க நாகரும்' என்ற நூலில் இந்திய நாகரே அமெரிக்காவில் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் குடியேறினர் என்று கூறுகிறார். மெச்சிக்கோவில் 'அஸ்டெக்' இனத்தவரும், பெரு நாட்டின் 'இன்கா' இனத்தவரும் திராவிடரது பழக்க வழக்கங்களையே கொண்டுள்ளனர் குங்குமம் இடுதல், காதணி அணிதல், சுண்ணம் இடித்து மகளிர் அலங்காரம் செய்தல், நகர அமைப்பு, கோவில் கோபுர அமைப்பு எல்லாமே தென்னிந்தியரைப் போலவே கையாளப்பட்டன. மெச்சுக்கோ சிவன் கோயிலில் 3900 தேவதாசிகள் தியோம்பிச் சேவித்தனர். கோயிற் பூசை நேரங்களிற் சங்கு ஊதினர். ஓவியம், சிற்பம் கூட தென்னிந்திய முறையிலே யே



அகத்தியர் தமது தவ வலிமையால் கடல் கடந்து சுமாத்ரா, ஜாவா, பாலி, மலேயா, கம்போடியா முதலிய தீவுகளையடைந்து தமது உறவினரை அவ்விடங்களில் வதியச் செய்து பல சிவாலயங்களையும் தோற்றுவித்து - இன்றும் அந்நாடுகளில் முதற்கடவுளராகத் திகழ்கின்றார். ஆதிசித்தர் பதினெண்மருக்கும் இவரே முதற் குருவாகவும் தலைவராகவும் கருதப்படுகிறார். காயசித்திக் முறைகளை ஏனையோருக்குக் கற்பித்தவர் இவரே. 'அகத்தியர் என்றால் தமிழ், தமிழ் என்றால் அகத்தியர்' என்னும் வழக்கு அவரது பெருமையைக் குறிக்கும். இவர் சிவபிரானை காசியிலிருந்து பல்லாண்டகாலம் பூசித்து வந்துள்ளார். என பழைய நூல்கள் கூறும் சிவனைக் குருவாக உடையவராதல்லால் இவரை பட்டாகுரு என்று ஜாவா மக்கள் துதிப்பர். இவரின் உதவியால் தென்னிந்தியாவில் இருந்துவந்த அரசர்களால் அந்நாட்டு மக்கள் ஆளப்பட்டதாகவும் மகாபாரதத்தையும் இராமயணத்தையும் அந்நாடுகளில் இவருடைய சிலைகள் வைத்துப் பூசிக்கப்படுகின்றன. கம்போடியாவிலும் இவர் வாழ்ந்ததாக வரலாறு உண்டு. இப்படியாக சிவபிரான் தந்த தமிழை அகத்திய மாமுனி கடல் கடந்து பல நாடுகளிலும் தமிழ்ப் பண்பாட்டைப் பரப்பியதன் மூலம் என்றும் தமிழரால் போற்றப்பட வேண்டியவராவர்.

கிழக்கு போர்ணியோவில் மன்னன் மூலவர்மனின் சாகசனங்கள் நான்கில் வேத முறையில் யாகங்களியற்றிய பிராமணரின் குடியிருப்பு ஒன்று இரந்துள்ளதைத் தெரிவிக்கின்றன. தாய்லாந்தியல் ஒரு ஏழாம் நூற்றாண்ட கல்வெட்டு தென் இந்தியாவிலிருந்து வந்துள்ள வணிகர் பற்றி குறிப்பிடுகின்றது. இராஜராஜசோழன் வெற்றி கொண்ட நாடகளில் நக்கவார தீவுகளும், மலாயாவில் உள்ள தக்கோடாவும் அடங்கும் என்று திருவாலங்காடு சாசனங்கள் குறிப்பிடுகின்றன. இந்தியத் தமிழரின் ஆதிக்கம் தென்மேற்கில் மடகாஸ்கர் தீவிலிருந்து கிழக்கே டொங்கிங் வரை பரவியிருந்தது. தென் இந்தியாவிற்கும் சீனாவிற்கும் மிகப் பழங்காலம் தொட்டே வணிகத் தொடர்புகள் இருந்துள்ளன.

சீனக்கப்பல்கள் பண்டமேற்றிய துறைமுகள் கோழிக்கோடு, கொல்லம் நாகப்பட்டினம், மாமல்லபுரம் ஆகும். சீன வணிகருக்காக

நாகப்பட்டினத்தில் பல்லவ மன்னன் நரசிம்மன் 'சீன பகோடா' என்று அழைக்கப் பெற்ற புத்த விகாரையைக் கட்டினான். சீனத்துறைமுகம் சூ வாங் சூவில் தமிழ்க் கல்வெட்டு ஒன்று தமிழ் வணிகர் குடியிருப்பு மற்றும் கடல் வாணிபம் பற்றிக் கூறுகிறது.

தென்னிந்தியாவிற்கு புத்தமதம் இலங்கையிலிருந்து பரவியது, இரண்டாம் நூற்றாண்டில் நடைபெற்ற 'பத்தினி', விழாவிற்கு இலங்கை மன்னன் கஜபாகுவை சேர மன்னன் செங்குட்டுவன் அழைத்திருந்தான். முதலாம் சேனன் காலத்தில் இலங்கையின் தலைநகரைப் பாண்டியர் கைப்பற்றினர். பத்தாம் நூற்றாண்டில் சோமர் இலங்கையைக் கைப்பற்றி எழுபத்தேழு ஆண்டுகள் ஆட்சி புரிந்தனர். இலங்கைக்கு ஓவியம், கட்டகலை, இலக்கியம் ஆகிய பலதுறைகளிலும் பன்பாட்டு வகையில் தென்னிந்தியா உதவியுள்ளது. பத்தினி தெய்வ வழிபாடும் சைவமும் இன்றும் இலங்கையில் நிலையாக இருக்கின்றன. பாண்டிய மன்னனின் இரட்டை மீன் இலச்சினை பொறித்த கல்வெட்டு திருக்கோணேச்சர கோவிலின் முன்னுள்ள கோட்டை மதிற் சுவரில் காணப்படுகிறது. (திருகோணமலை - பிறடெறிக் கோட்டை) இக்கோவில் அந்நியரால் கோவில் இடித்துச் சூறையாடப்பட்ட பொழுது எறியப்பட்ட 'கல்' - பின்னர் கோட்டை மதிலுக்குக்கல்லாகியது. இது பன்னிரண்டாம் நூற்றாண்டிற்குரியது என்பர் ஆய்வாளர். இந்தக் கல்வெட்டின் விளக்கம்

பாடல் - (1) முன்னே குளக் (2) கோடன் மூட்டுந் (3) திருப்பணியைப் (4) பின்னே பறங்கிபி (5) ரிக்கவேமன்னவ (6) பின் பொண்ணாத (7) தனையியற்ற வழி (8) த்தே வைத்து (9) எண்ணார்வருவே (10) ந்தர்கள்

வட இலங்கையில் தமிழ் அரசு ஒன்று கி.பி 1244லிருந்து கி.பி 1621 வரை இருந்துள்ளது. இலங்கையில் பேசப்படும் தமிழ் தென்னாட்டில் பேசப்படும் தமிழை விட தூயதும் வேற்று மொழிக் கலப்பற்றதுமாகும். சைவ சமயத்தையும் நன்றே போற்றிப் பேணி வருகின்றனர்.



இலங்கையில் பல தமிழ் அறிஞர்கள் தோன்றி தமிழுக்கும் சைவத்திற்கும் அரும்பணியாற்றியுள்ளனர். திருநெல்வேலி சுவாமி ஞானப்பிரகாசர், ஆறுமுக நாவலர், சுவாமி விபுலானந்தர், வண. பிதா நல்லூர் ஞானப்பிரகாசர், வண.பிதா எச்.எஸ். தாவீது, வண.பிதா. தனிநாயக அடிகள், வித்துவான் கணேசையர், இன்னும் பல புலவர்களையும் குறிக்கலாம். ஈழத்துப் பூதந்தேவனார் காலத்திலிருந்து இன்றுவரை இலங்கைகத் தமிழரின் தொண்டு அளவிடற்கரியது. கலைகளின் செம்மை பற்றி ஆனந்தா குமாரசாமி அவர்கள் ஆற்றிய பணி சொல்லுந்தரமன்று. இந்திய கலைப் பாணியிலிருந்து உலக அறிமுகம் செய்தவரும் இந்தத் தமிழரே. இலங்கை அரசியல் விடுதலை பெறவும், அரசியற் பண்பாட்டில் முன்னேறவும் வழி வகுத்த தமிழ்ப் பெருமக்களில் முக்கியமானோரில் சேர். பொன்னம்பலம் இராமநாதன், சேர். பென்னம்பலம் அருணாசலம் சகொதரரும் குறிப்பிட்டத் தகுந்தோராவர்.

தென்னிந்தியாவிற்கே உரிய தனிச் சிறப்புக்களை சிந்து வெளி, சுமேரியா, எகிப்து, கிரீட் ஆகிய நாடுகளில் உள்ள கைவண்ணப் பொருட்களிலும் சமய, சமுதாயப் பழக்க வழக்கங்களிலும் காணலாம். சிந்துவெளி மக்கள் பயன்படுத்திய பொன், மைசூர் மாநிலத்துகோலார் தங்கச் சுரங்கத்திலிருந்து பெறப்பட்டது. ஹரப்பா பண்பாட்டு நகரங்களிற் காணப்பட்ட விலையு யர்ந்த அமேஸான் வகைக் கற்கள் நீலகிரியில் மட்டும் கிடைத்துள்ள வகையினதாம். தமிழரின் சிலம்பு அணியும் பழக்கத்தை நினைவூட்டுவனவான சிந்துவெளி நகரப் பகுதிகளிலும், மற்றும் கிரீட் தீவு நகரங்களிலும் காற் சிலம்பு பல பொருட்களிலும் ஓவியங்களிலும் காணப்படுகிறது. இது ஒத்த ஒரு பண்பாட்டினை ஐயத்திற்கு இடமின்றி நிருபிப்பனவாகும்.

எத்திதோப்பியா, மடகாஸ்கர், கில்வா, செனிகால், போன்ற நாடுகளில் கடல் கோள்கள் பற்றியும், நாவாய்களில் தம் முன்னோர் இக் கடலூழிகளுக்குத் தப்பி வந்து குடியேறியதாகவும் கதைகளும் பழம் பாடல்களும் உண்டு. இவை கடற் கோள்கள் பற்றிய உண்மை களையும், குமரி நாட்டுத் தமிழரே பரந்து பல இடங்களுக்கும்

சென்று குடியேறினர் என்பதையும் தெரிவிக்கும். பல நாடுகளின் கரையோர இடப்பெயர்களும் மதுரை - குமரி என்ற பெயரின் சிதைவுகளாக இருப்பதைக் காணலாம். ஜெர்மனியைச் சேர்ந்த ஜொகன்னஸ் றியெம் என்னும் அறிஞர் உலகில் நிகழ்ந்த வெள்ளப் பெருக்குமற்றும் கடற்கோள்கள் பற்றிய வரைபடம் ஒன்று வெளியிடப் பட்டுள்ளார். இதில் குமரி நாடு இருந்த உண்மை தெரிகிறது.

தென் தமிழ் நிலமான குமரி நாட்டுத் தலை நகராக இருந்தது தென் மதுரை. இந்த மதுரையில் முதல் தமிழ்ச் சங்கம் நடை பெற்றது. பின்னர் இந்த நகரம் கடல் வாய்ப்பட்டது. மதுரை அழகான நகரமாக இருந்துள்ளது. அது முதல் பட்டினமாகவும் இருந்துள்ளது. அதனால் தான் அந்த நகரத்தைக் கடல் விழுங்கிய பின், இன்றும் 'மதுரை' என்று உலகின் பல பாகங்களிலும் பெயர்கள் செறிந்திருக்கக் காண்கிறோம். சில கொச்சையாகி விட்டாலும் மூலத்தை நழுவ விடவில்லை. என்று தெரிகிறது.

| | |
|---|---|
| அத்லாந்திக் பெருங்கடலில் உள்ள தீவு | - மதெய்ரா தீவு |
| இந்தோனேசிய தீவு | - மதுரா, மதுரை (தீவுகள்) |
| பிறேசில் | - மதெய்ரா ஆறு |
| டெக்கான் மாநிலம் வடமெரிக்கா | - மத்ரே |
| மெக்சிகோ, சியேராலியோன் | - மத்ரே |
| ஆஸ்திரேலியா, சிலி, பெரு | - மத்ரே |
| ஸ்பெயின் | - மாத்ரிட் |
| சவுதிஅரேபியா | - மஸ்துரா |
| இலங்கை | - மாத்தரா |
| லொம்பொக். இந்தோனேசியா | - மதரம் |
| நியூசீலாந்து, ஸ்பெயின் | - மதரவோ |
| ஓமான் எகிப்து | - மதராஹு |

***அறிஞர் கதிர் – தணிகாசலம்*** உடுப்பிட்டி யாழ்ப்பாணம்)
(தமிழ்மொழியின் மாட்சியும், பரந்த பண்பாடும்" நூலில்)


உலகத் தமிழர் குரல் – முகவரி
"Paramanathan House"
Manipay Road, THAVADY
Kokuvil, Sri lanka.




# தாழ்வுற்ற தமிழரின் பொருளாதாரம்

***கவிஞர் செ. பரமநாதன்***

ஆங்கிலேயர்கள் 1948 பெப்ரவரி 4ல் இலங்கைக்கு சுதந்திரத்தை அளித்தனர். அதன் பின் இலங்கை ஆட்சியாளர்கள் கடைப்பிடித்த கொள்கைகளால் மிகவும் பாதிப்புக்குள்ளான சமூகம், தமிழ்ச் சமூகமேயாகும்

இவர்களைப் பொருளாதார ரீதியில் பிரித்துப் பார்க்கையில்-

1. நீண்ட நெடுங்காலமாக இலங்கையில் சொத்தும் தொழிலும் கொண்ட தமிழர்கள்
2. வர்த்தக நிதி நிறுவனங்களில் பங்காற்றிய தமிழர்கள்
3. இலங்கையில் வளர்ந்து வந்த தொழில் நிறுவனத்தைக் கொண்ட தமிழர்கள்
4. இந்தியாவில் சொத்தும் இலங்கையில் தொழிலும் கொண்ட தமிழர்கள்
5. சிறு வியாபார நிறுவனங்களில் பங்காற்றிய தமிழர்கள்
6. மலையக தோட்ட உரிமையாளர் மற்றும் அவர்களோடு நெருக்கமான உறவு கொண்ட தமிழர்கள்
7. விவசாயத்தைத் தொழிலாகக் கொண்டவர்கள் என ஏழு வகையாகப் பிரிக்கலாம்.

இந்த ஏழுவகைப் பிரிவினரான தமிழர்கள் பொருளாதார நிலையில் மிகவும் மேலான வசதி கொண்டவர்களேயாகும். ஆனால் சமூகத்தில் மிகவும் பின்தங்கிய தமிழர்களை வரிசைப்படுத்தினால், மலையகத் தோட்டத் தொழிலாளர்கள், விவசாய கூலித் தமிழர்கள் அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் பணியாற்றியவர்கள் நகர் புறங்களில் பின் தங்கிய நிலையில் உள்ளவர்கள், மற்றும் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டவர்கள் எனப் பிரிக்க முடியும். 1945க்கு முன்னர் இலங்கையின் மொத்த வணிகத்தில் முழுக்க முழுக்க தமிழர்களே ஈடுபட்டிருந்தனர்.

பிற இனங்களின் மீது சிங்கள மக்கள் எதிர்ப்பு கொள்ளும் நிலை 1930ல் தீவிரமடைந்த காலத்தில் வர்த்தகத் துறையின் மீது

கவனம் செலுத்தினர். ஆங்கிலேயர் ஆட்சியில் சிங்கள இனத்தவரில் ஒரு குறிப்பிட்ட அளவுதான் வணிகத்தில் நிறைவு பெறமுடிந்தது. இலங்கை சுதந்திரம் பெற்றவுடனேயே பல பொருளாதாரத் திட்டங்கள் உருவாகின. இதன் மூலம் கல்வி மற்றும் நிர்வாக அமைப்புகளில் பணியாற்றிய நடுத்தர தமிழ் வர்க்கம் பாதிப்புக்குள்ளானது.

அதுமட்டுமல்லாது தொழில் மற்றும் கட்டுமானத் தொழிற்சாலைகள் யாவும் சிங்களவர் பகுதிக்கே சென்றன. உதாரணமாக ஒலுவிலவில் நிறுவப்பட்ட இரும்புத் தொழிற்சாலை களணியில் உள்ள டயர் தொழிற்சாலை, கந்தளாயில் உள்ள சர்க்கரை ஆலை, நாத்தாண்டியாவில் உள்ள கண்ணாடித் தொழிசாலை, எல்பிட்டியாவில உள்ள காகிதத் தொழிற்சாலை, கண்டி, துல்கிரிய ஆகிய இடங்களில் அமைந்துள்ள பஞ்சாலைகள், சபுஸ்கந்தவில் உள்ள உரத் தொழிற்சாலை, கொலனாவில் உள்ள எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை, எக்கலவில் உள்ள தொழிற் பேட்டை, புத்தளம், காலியில் உள்ள சீமெந்து தொழி சாலைகள் மற்றும் பல தொழிற் சாலைகள் சிங்கள மக்கள் பெரும்பான்மையாக வாழும் பிரதேசங்களில் உருவாக்கப்பட்டன.

யாழ்ப்பாணம், மன்னார், பகுதிகளில் எண்ணெய் கண்டு பிடிக்கப்பட்டதும் அவ்விடங்களில் குறிப்பாக மன்னாரில் எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனம் உருவாகவும், மேலும் பல எண்ணெய் கண்டு பிடிப்பு நடத்துவதற்காகவும் ரஷ்யக்குழு சிபார்சு செய்திருந்த போதிலும் அவை கிடப்பில் போடப்பட்டன. இதே போன்று 1960ல் உலக வங்கி இலங்கையின் பல பாகங்களில் ஆய்வு செய்து துணுக்காய், பூனகரி போன்ற இடங்களில் மிகப் பெரிய சர்க்கரை ஆலையை நிறுவ சிபார்சு செய்ததோடு அதற்கு நிதி உதவி செய்யத் தயாராக இருப்பதாகக் கூறியதோடு இன்னும் இத்திட்டங்கள் நிறைவேற்றப்படாமலே உள்ளன.

காங்கேசன்துறை போன்ற இடங்களில் வளர்ச்சிக்கு அமெரிக்க அரசாங்கம் முக்கியத்துவம் அளிக்கத் தயராகவிருந்த போதிலும் அதைப் பரிசீலிக்ககக் கூட இலங்கை அரசு முன்வர



## திருவள்ளுவர் ஆண்டையும் மாதங்களின் தமிழ்ப்பெயர்களையும் தமிழர்கள் பின்பற்ற வேண்டும்.

*- பேராசிரியா கதிர் முத்தையன் அவர்களின் வேண்டுகோள்*

நமது இயக்கத்தின் பணிகளில் திருவள்ளுவர் ஆண்டினைப் பயன்படுத்துக. திருவள்ளுவர் ஆண்டு ஆங்கில ஆண்டுடன் 31 ஐக் கூட்டினால் கிடைப்பது ஆகும் பொங்கல் அன்று திருவள்ளுவர் ஆண்டு தொடங்குகின்றது. மாதங்களின் தமிழ்ப் பெயர்கள் இதோ 1. சுறவம் (தை) 2.கும்பம் - மாசி 3. மீனம் - பங்குனி, 4. மேழம் - சித்திரை, 5. விடை - வைகாசி, 6.ஆடவை - ஆனி, 7. கடகம் - ஆடி, 8. மடங்கல் - ஆவணி, 9. கன்னி - புரட்டாதி, 10. துலை - ஐப்பசி, 11. நளி - கார்த்திகை, 12. சிலை - மார்கழி, திருவள்ளுவர் ஆண்டின் மாதப் பெயர்களே இவையாகும். இவற்றை இயக்கத்தின் வெளயீடுகள், நிகழ்ச்சிகள் கூட்டங்களில் பயன்படுத்துங்கள்.

திருவள்ளுவர் ஆண்டுதொடர்பாக நான் சிறு நூல் ஒன்று எழுதி 2002ல் மே மாதம் வெளியிட உள்ளேன் இங்கே திருக்குறள் நெறியையும் தமிழ் மொழியையும் உடன் கொண்டு செயற்படும் "தமிழ் ஒளி இயக்கம்" என்னும் தொண்டுழிய நிறுவனம் செயற்படுகிறது. 2002 மே மாதம் மலேசியாவில் "பாவாணர் தமிழ் நெறி" மாநாடு நடாத்தவுள்ளனர் அது போன்ற ஒரு மகாநாட்டினை தமிழகத்திலும் நடத்திடத் திட்ட மிட்டுள்ளோம.

நாங்கள் திருக்குறள் கற்பிக்கும் பயிற்சி வகுப்புக்களைத் தனியே மாணவர்களுக்கு நடத்தி வருகின்றோம் உ.த.ப.இயக்க இலங்கைக் கிளையும் திருக்குறள் மற்றும் தமிழ் நெறியை மாணவர்களுக்கும் குழந்தைகளுக்கும் கற்பிக்க முயற்சியெடுக்க வேண்டும். "யாம் பெற்ற இன்பம் பெறுக வையகம்" என்னும் நமது தமிழ்ப் பண்பாட்டினை உலகிற்கு அளிக்க வேண்டிய நிலையில் நாம் உள்ளோம். இங்கே நாள் தோறும் தமிழ்க் குழந்தைகள் திருக்குறள் ஓதும் பழக்கமும் உருவாகி வருகின்றது.

*பேராசிரியர் திரு. கதிர் முத்தையன்* அவர்கள்
(தமிழ்நாட்டில் கடலூரைச் சேர்ந்தவர் உ.த.ப இயக்கத்தின் இந்திய ஒன்றியத்தின் முக்கியமான பிரமுகராவர்)

வில்லை. அதே போன்று கிழக்கு மாகாணத்தில் விவசாயம் செய்யக் கூடிய பகுதிகளில் எந்தவிமான தொழில் வளர்ச்சித் திட்டங்களும் நிறுவப்படவில்லை. காரணம் இதுவும் தமிழர் வாழும் பகுதியில் இருப்பதே.

இது போன்ற புறக்கணிப்புக்கு என்ன காரணம் இவை யாவும் தமிழர் பகுதிகளில் அமையப் போகும் திட்டங்களாகும். இவை நிறைவேற்றப்பட்டால் தமிழர் பகுதிகளில் உள்ளோர் பலர் வேலை வாய்ப்பினை அதிகம் பெறுவர். ஒரு தொழிலை அடுத்து அதன் உப தொழில்கள் தோன்றும் இதனால் தமிழர்களின் வாழ்க்கை வளம் பெறும். இதனாலேயே திட்டங்கள் யாவும் கிடப்பில் போடப்பட்டன. இதனால் தமிழர் பகுதிகளில் வேலை வாய்ப்பை இழந்த இளைஞர்களின் எண்ணிக்கை மேலும் மேலும் உயர்ந்தது.

1983ம் ஆண்டுக்குப் பின்னர் தமிழர் வாழும் பிரதேசங்களுக்கு வளர்ச்சிப் பணிக்கு எந்த விதமான நிதியும் ஒதுக்கப்படவில்லை. இந்த நிலைமை தொடர்கின்றது. இன்றைய காலத்தில் உருவெடுத்து மக்களின் வாழ்வியலைச் சீரழிக்கும் போர்ப் பிரச்சினைக்கு முடிவு தோன்ற வேண்டும் இலங்கையில் வாழும் சகல இனமக்களும் சரிசமமாக வாழ்ந்து வளம் பெறவேண்டு மாயின் நாட்டில் பாரபட்ச மற்ற நீதியான ஆட்சி நிர்வாகம் அமைவது காலத்தின் தேவையாகும்.

### புதிய தலைவர்

தமிழர் சோதிட ஆராய்ச்சிக் கழகத்தின் புதிய தலைவராகப் பிரபல சோதிட ஆராய்ச்சி நிபுணர் திரு. ஆ. சண்முகலிங்கம் அவர்கள் சமீபத்தில் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இந்தத் தமிழர் சோதிட ஆராய்ச்சிக் கழகம் யாழ்.நகரில் இயங்கி வருகின்றது. இங்கே வாரந்தோறும் நடைபெற்றுவரும் சோதிட ஆராய்ச்சிக் கருத்தரங்குகளில் ஆர்வமுள்ள சோதிட நிபுணர்கள் பங்குபற்றி பயனடைந்து வருகின்றார்கள். இங்கே ஜாதகக் குறிப்புகளில் பலன் கண்டறியும் விரிவான ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன. சோதிட நிபுணர்களான தி. கே. சதானந்தன் அவர்கள் செயலாளராகவும், திரு.த.அழகேசன் அவர்கள் பொருளாளராகவும் செயலாற்றி வருகின்றார்கள்.



## எழுத முடியுமா

உள்ளத்தில் உள்ளது
உதட்டில் மட்டுமா
எழுத்திலும் வரும்
எழுத முடியுமா!
முத்திரையில் குறைவில்லை
முகவரியில்
சிறு பிழையும்
இல்லை யென்றால்
பின் னெதற்கு
சிறையும் வதையும்
அந்தரங்கம்
என்றும் புனிதமானது
இனிமையானது
இது தெரிந்தும்
பிரிந்துப் பார்த்து
வரி வரியாய்
சரி பார்ப்பது
சரியல்ல
பின் தாமதமாய்
அனுப்புவதும்
முறையல்ல
கடிதங்கள்
கடதாசியல்ல
இதயங்கள்

**கவிஞர்**
***க. நாகராசா***
நுனாவில்

எமக்கு 1995க்கு முன் வெளிவந்த உலகத்தமிழர் குரல் ஏடுகள் அனுப்பினால் நூல்கள் அனுப்பிவைப்போம்

~ **ஆசிரியர்**

## உலகின் இரு கண்கள்

தமிழ் மறையாம் திருக்குறள்
முதலாவது குறளில்
"அகரமுதல எழுத்தெல்லாம் ஆதிபகவன்
முதற்றே உலகு"
எனக் கூறுவதில் இருந்து ஆடவர், மகளிர் இருவரும் இந்த உலகிற்கு பொதுவானவர்களாவர். பறவைகளுக்கு சிறகு இரண்டு (சோடியாக) இருக்கும் போது தான் அவை பயனுள்ளவையாக இருக்கின்றன. கோழியா முட்டையா முந்தியது என்பது போன்று இந்த இரட்டைகள் தான் உலகை வழி நடத்துகின்றன.

ஔவையார் தொடக்கம் இக்காலப் பெண்மணிகள் வரை குடும்பத் தலைவியாக, நாட்டின் தலைவியாக பெண்களது பெருமை ஆடவர்களுக்கு இணையாகவே விளங்கி வருகிறது. சங்கீதத்தில் சுருதி எப்படியோ அத்தகையதே வாழ்க்கையில் பெண்ணின் நிலையும். பெண்கள் சங்கீதத்தின் சுருதிபோன்று ஆடவர்களின் புகழுக்கு அடித்தளமாக இருக்கின்றனர்.

ஒன்றில்லாதது மற்றொன்று உருவாக முடியாது. மனித உரிமைகள் என எங்கும் பேச்சாக இருப்பினும் பெண்களின் உரிமைகள் காத்துநிலை நாட்ட பல நிறுவனங்கள் காலத்துக்குக் காலம் நிறுவப் பட்டு விழிப்படைவது நல்ல விடயமே ஆயிரம் பூக்கள் மலரட்டுமே!

இப்படியாக காலத்துக்கு காலம நாகரிகம் வேறுபடினும் ஆண், பெண் சமநிலை வாழ்வு பெய்யாகுமிடத்து உலகம் செயலிழந்துவிடும் - ஒருகை தட்டி ஓசை வரவாபோகிறது.

*திருமதி. கனகராசா - சகுந்தலாதேவி*
அச்சுவேலி - யாழ்ப்பாணம்.

## உ. த. ப. இயக்கத்துக்கு மத்திய நிலையம்

இலங்கையில் உ.த.ப. இயக்கத்துக்கு யாழ்ப்பாண மாணிலத்தில் மத்திய நிலையமென்று அமையவுள்ளது கேட்போர் கட்டத்துடன் கூடியதாக இது அமைக்கப்படவுள்ளது. இதை அமைத்துத்தர் தலமையக்கிளை சிந்தித்து வருவதாகச் செய்திகள் கிடைத்துள்ளன. அநேகமாக இதற்கான ஆரம்பப் பணிகள் இந்த ஆண்டில் தொடக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த நிலையம் அமைக்க ஆகும் நிதியை ஐரோப்பா, கனடா நாடுகளில் வாழும் தமிழ் அபிமானிகள் உதவிட முன்வருவார்களென நம்பப்படுகின்றது. இந்தப்பணிக்கு நிதி உதவி செய்யும் தமிழ் நெஞ்சங்கள் அறங்காவலர் சபையில் இடம்பெற வாய்ப்புக்கள் அளிக்கப்படவுள்ளன. இந்த நிலையம் தமிழர்களிடையே உலகளாவிய ரீதியிலும் உள்நாட்டிலும் தமிழ் உறவுப் பணியையும், தமிழ் வளர்ச்சிப் பணிகளையும் மேற்கொண்டு செயற்படவுள்ளது.

## ச. சோமசுந்தர பாரதியார்
## (1879 – 1959)

சொற்களின் உருவமும் முடிவும் பிறழாது அமைதலும் வேண்டும். மருஉச்சொல்லாட்சியை மறுப்பாரில்லை. ஆன்றோர் வழக்கும், அறிஞர் ஆட்சியும் பெற்றவை அனைத்தும் நற்றமிழ் ஆகும். மற்றிடத்து எல்லாம் சொல் உருவோடு பொருள் முடிபின் அடைவும் போற்றுதலும் வேண்டும். கொச்சை வழக்கு எதுவும் கொள்ளுதல் கூடா. எடுத்துக் காட்டினும், நாடக வழக்கினும் இடையும், தகுதியையும் நோக்கி, இழிவழக்கு ஒழித்து, ஏற்பன ஏற்புழி அருகி வழங்கல் பிழை ஆகாது. அங்கு அதனைப் பெருவழக்காக்கும் பிழையைக் காத்தல் யாவர்க்கும் கடனாம். யாண்டும் ஐயமும் திரிபும் அகற்றல் வேண்டும். சொற்கள் தொடரும் இடங்களில் ஓசையும் ஒழுக்கும் மாறுபடாமல் மொழிஇயலடைவு முரண்படாமல் ஓம்புதல் வேண்டும், இயற்கையோடு முரணி வெறுக்க விட்டிசைக்கும் எழுத்துப் புணர்ச்சியும் பிரிப்பும் வழுவாம். தமிழ்மொழி இயல்பைச் சிதைக்கும் வழ்க்கை எங்கும் கொள்ளாது தள்ளவேண்டும். இவை அனைத்தும் நல்ல தமிழ் நடைக்கு இன்றியமையாதது.

உலகத் தமிழர் குரல் கிடைக்குமிடங்கள்

936, MCCOWAN ROAD
SCARBOROUGH M1P 3H6
CANADA

STR - 26
RIEGEL
48431 Rhiene
GERMANY

*110 Jalan Bankau*
*Berkley Garden*
*Klang*
*MALAYSIA*

40, KAMARAJAR NAGAR
CADDALORE - 607001
SOUTH INDIA

தமிழ்ச் சங்கம் கொழும்பு - 6

---

## - ஞானம் -

கலை இலக்கிய திங்கள் இதழ்
19/7, பேராதனை வீதி,
கண்டி
சிறீ லங்கா

---

ஸ்ரீ சாயி அச்சகம், கொம்பியூட்டர் பிறின்டேஸ்
கே. கே. எஸ். வீதி, புநாறிமரத்தடி - யாழ்ப்பாணம்